மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசிடம் மாநில அரசு முதலில் கேட்டது 14 கோடி ரூபாய். ஆனால் மத்திய அரசாங்க அமைச்சர் அவர்கள் திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கும் படிச் சொன்னபோது ரூ. 13 கோடி என்ற அளவிற்கு சமர்ப்பிக்கப் பட்டது. அதை இரண்டு பிரிவாகப் பிரித்து அனுப்பும்படி கோரப்பட்டதால், ஆறு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டமும் ஏழு கோடி ரூபாய்க்கு மற்றொரு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டிருக் கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : கிழக்குக் கடற்கரையோரத்தில் சாலை அமைப்பது ஒரு திட்டம் இன்னொன்று கால்வாய் வழிப் போக்குவரத்தை அதிகரிப்பதற்கு ஒரு திட்டம். இரண்டு திட்டங்களும் அரசாங்கப் பரிசிலனையில் இருக்கிறது. இவை இரண்டையும் ஒட்டி ஒரு முடிவு எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர் களின் கேள்வி கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கிழக்குக் கடற்கரைச்சாலை எந்த இடத்தில் ஆரம்பித்து எங்கு வந்து முடிவடைகிறது ? இதற்கு மொத்தத்தில் ஆகும் செலவு மதிப்பீடு எவ்வளவு ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The proposed East Coast Road passes through the revenue districts of Chingleput, South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari. The total length of the road is 482 miles including 21 miles in Pondicherry and Karaikal limits and 4½ miles in Madras City.

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் அரசு முதலில் தயாரித்து அனுப்பிய எஸ்டிமேட் 14 கோடி ரூபாய்.

*** 340 வினு.—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாகை, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந் தாங்கி தாலூகாக்கள் வழியாகச் செல்லும் சேதுச்சாலை வேலை எப்போது முடிவு பெறும் ?

(இ) இதற்காக அரசு இன்றுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள கிழக்குக் கடற் கரைச் சாலையை தேசிய நெடுஞ்சாலையின் தரத்துக்கு உயர்த்து வதற்கான செயற்குறிப்பை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கவேண்டுமென இவ்வரசு பரிந்துரைத்தது. நிதியின்மை காரணமாக இவ் வேலைதிட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசு சேர்க்க இயலவில்லை. இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று

இவ்வரசு வலியுறுத்தியது. இதன் முதல் நடவடிக்கையாக மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்ட எல்லை வரை 25 மைல் நீளமுள்ள சாலைத் தொடர்பு அறுபட்ட பகுதியை அமைப்பதற்கான வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் கோவளத்துக்கு அருகே உப்பங் கழியின்மீது பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: இந்த சேதுச்சாலையையொட்டி தஞ்சை மாவட்டத்தில் தென் பகுதியில் தஞ்சை மன்னர்கள் ஆண்ட காலத்தில் கட்டி வைக்கப்பட்ட சத்திரங்கள்—அம்மணிசத்திரம், ராஜாமடம் சத்திரம்—போன்ற சத்திரங்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பதையொட்டி இந்த சாலை அமைக்கப்படும்போது அவை களையும் புனரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய செயற் குறிப்பு இல்லை.

பரமக்குடி பயணியர் விடுதி

* 341 **வினா—திரு. வீ. மலைக்கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் உள்ள பயணியர் விடுதியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Educational finance of Panchayat Union Councils

*342 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Government have constituted a ten-member Committee to review the educational finance of the Panchayat Union Councils in the State; and

(b) if so, the names of those members?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) (1) அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை—தலைவர்.

அரசு சார்புள்ள உறுப்பினர்கள்.

(2) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

(3) அரசுத் துணைச் செயலாளர், கல்வித் துறை.

(4) துணைச் செயலாளர் (திட்டம்), நிதித் துறை.